# "வார்த்தை தேவனாயிருந்தது" (1:1-13)

*அமெரிக்க நாட்டுச் செய்திகள் மற்றும் உலகத்தில் நடைபெற்றவை பற்றிய அறிக்கைகள்* என்ற பத்திரிகையின் சமீபத்திய இதழ் ஒன்றின் மேல் அட்டையானது "இயேசு யார்?" என்ற கேள்வியைக் கேட்டு, அதன் உட்பகுதியில் நாம் "கர்த்தர்" என்று அழைப்பவருடைய அடையாளம் பற்றி அது, கற்றறிந்த யூகங்கள் சிலவற்றை அறிவித்திருந்தது:

> கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், இயேசு ஒரு மந்திரவாதி மற்றும் குணப்படுத்துபவர் என்றும், மத மற்றும் சமூகப் புரட்சியாளர் என்றும், அடிப்படைவாத அமைதி நிலைத் தத்துவ ஞானி என்றும் பல விதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இயேசு, கும்ரானில் சவக்கடல் சுருள்கள் சமூகத்தின் தலைவராக இருந்தாரென்றும், சிலுவையில் அறையப்பட்ட பிறகு உயிர் பிழைத்த அவர் இருமுறை திருமணம் செய்து கொண்டு மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனாயிருந்தார் என்றும் கூட ஒரு எழுத்தாளர் கோட்பாட்டை வரையறுத்திருக் கின்றார்.[1]

*வாரச் செய்தி* என்ற பத்திரிகையும் கூட 1994ல் இதே விதத்தில் மேலட்டைக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது, இது "இயேசுவின் மரணம்" பற்றியதாகும். அந்தக் கட்டுரைகளில் ஒன்று, "இயேசு கருத்தரங்கு" என்று அறியப்பட்டுள்ள விடுதலை இறையியலாளர்களான எழுபத்தி ஏழு கல்விமான்களின் குழுவின் மீது கவனம் செலுத்திற்று. இந்த மக்கள், இயேசு யாராயிருந்தார் மற்றும் அவர் உண்மையில் என்ன செய்தார் என்பதைப் பற்றிய தங்கள் கருத்துக்களை உரைப்பதற்காக ஆண்டிற்கு இருமுறை சந்திக்கின்றனர். சுவிசேஷங்களில் உள்ள குறிப்பிட்ட வசனப் பகுதிகளின் அதிகாரத்தன்மை பற்றி ஓட்டளித்தல் என்பது அவர்களின் மிகப் புதிரான நடவடிக்கைகளில் ஒன்று ஆகும். ஒவ்வொரு நபருக்கும் நான்கு பாசிமணிகள் தரப்படும்; ஓட்டுப் போட வேண்டிய வேளையின் பொழுது, அவர்கள் ஏற்புடைய பாசிமணியை இடுதல் என்பது அவர்களின் முடிவைத் தெரிவிப்பதாக உள்ளது. சிவப்பு நிறப் பாசிமணிகள் என்பவை குறிப்பிட்ட வசனப் பகுதி கூறுவதை இயேசு உறுதியாகவே உரைத்தார் அல்லது செய்தார் என்று அர்த்தப்படுத்துகின்றது. இளஞ்சிவப்பு நிறப் பாசிமணிகள்

என்பவை, குறிப்பிட்ட வசனப் பகுதி விவரிப்பதற்குச் சற்று நெருக்கமான ஒன்றை இயேசு உரைத்தார் அல்லது செய்தார் என்று அவர்கள் நினைப்பதைக் குறிக்கின்றன. சாம்பல் நிறப் பாசிமணிகள் என்பவை, குறிப்பிட்ட வசனப் பகுதி எடுத்துரைக்கின்றதை இயேசு உரைத்தார் அல்லது செய்தார் என்பதில் அவர்களுக்கிருக்கும் ஐயத்தைக் குறிக்கின்றன, மற்றும் கருப்பு நிறப் பாசிமணிகள் குறிப்பிட்ட வசனப் பகுதி அறிவிப்பதை இயேசு ஒருபோதும் நினைத்ததில்லை அல்லது அதைப் போன்ற எது ஒன்றையும் அவர் ஒருபோதும் செய்ததில்லை என்பதில் அவர்களின் உறுதிப்பாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. "இயேசு கருத்தரங்கின்" பெரும்பான்மையானவர்களுடைய பின்வரும் முடிவுகள் அதிர்ச்சியளிப் பதாக உள்ளன, நான் இவற்றைத் தேவதூஷணம் என்றே நம்புகின்றேன்!

> "வரலாற்று" இயேசு என்பவர் அற்புதங்கள் எதையும் செய்ததில்லை, ஆனால் ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அன்பு ஆகியவற்றின் மூலமாக உணர்வுப்பூர்வமான சுகவீனங்களை எடுத்துப் போடுவதற்கான ஒரு வரமான குணமாக்குபவரின் தொடுகை ஒன்றை அவர் கொண்டிருந்தார். அவர் முற்றிலும் சமத்துவம் வாய்ந்துள்ள இறையரசு ஒன்றிற்காக - ஏதோ ஒரு நியாயத்தீர்ப்பு நாளில் இன்றி, இங்கு இப்பொழுதே இதற்காக - அழைப்பு விடுத்தார். ஆலயம் அல்லது அரசின் பதவிப்படிகளினுடைய தடையிடுதல் எதுவுமின்றி மக்கள் தேவனை நேரடியாக அனுபவிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். பஸ்காவின்போது எருசலேமில் அவர் ஒரு கலவரம் உண்டாகக் காரணமாயிருந்தார் என்பதற்காக அதிகாரிகள் ஏறக்குறையத் தற்செயலாகவே அவருக்குக் கொலைத் தண்டனை நிறைவேற்றினார்கள். பழைய மற்றும் புதிய மக்களான இயேசுவின் பின்பற்றாளர்களின் இருதயங்களில் அவர் வாழ்ந்தார், ஆனால் அவர் சரீரப்பிரகாரமாக மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவில்லை. சிலுவையிலிருந்து எடுக்கப்பட்ட அவருடைய உடலானது அநேக மாக, ஆழம் குறைந்த கல்லறையொன்றில் புதைக்கப்பட்டிருந்தது - அது நாய்களால் தின்னப்பட்டிருக்கலாம்.[2]

கல்வியாளர்களின் வட்டங்களில் மட்டுமின்றி, இல்லங்களிலும், காஃபி விற்பனை நிலையங்களிலும், மற்றும் தெரு முனைகளிலும் உலகம் முழுவதும் இயேசுவின் அடையாளத்துவம் என்பது இன்றைய நாட்களில் கலந்துரையாடலுக்கான ஒரு தலைப்பாக உள்ளது! அவர் "ஒரு மிகச் சிறந்த மனிதராக" இருந்தார் என்று ஒரு சிலர் கருத்துக் கொண்டுள்ளனர். அவர் ஒரு "தலைசிறந்த போதகர்" என்று மற்றவர்கள் நம்புகின்றனர். அவர் "வாழ்ந்தவர்களிலேயே மிக அதிக ஞானமுள்ள மனிதர்" என்பதில் இன்னும் சிலர் திருப்தி கொள்கின்றனர். உலகத்தின் பெரும்பாலான மக்கள் நாசரேத்தூர் இயேசு உண்மையில் யாராயிருந்தார் என்பது பற்றி ஏதேனும் சில கருத்துக் கொண்டுள்ளார்கள்.

பிறகு ஏன் நீங்களும் நானும் இந்தக் கலந்துரையாடல் எல்லாவற்றையும் மேற்கொள்ளுகின்றோம்? மேற்குறிப்பிட்ட செய்திப் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்ட முடிவுகளுடன் மிகப் பலத்த வகையில் நான் கருத்து

வேறுபாடு கொண்டிருக்கும் வேளையில், மற்றும் இயேசுவைப் பற்றிய கருத்துக்களில் புகழ் பெற்றவையென்று கருதப்படும் பலவற்றைக் குறித்து நான் கவலையுள்ளவனாய் இருக்கையில், இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்திருந்து சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் கூட "இம்மனிதர் யாராயிருந்தார்?" என்று இன்னமும் அவரைப் பற்றி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் என்ற உண்மையினால் நான் கவரப் படுகின்றேன். அந்தக் கேள்விக்கு ஒரு திட்டவட்டமான பதிலைக் கொண்டு யோவான் சுவிசேஷம் தொடங்குகின்றது என்பதே நமக்கு நற்செய்தியாக உள்ளது!

## வார்த்தை (1:1-5)

''ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத் திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (1:1). இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம் பற்றி யோவான் ஒன்றும் கூறவில்லை. அதற்குப் பதிலாக, அவர் "ஆதியிலே" என்று தொடங்கினார். பழைய ஏற்பாட்டுடன் பழக்கப்பட்ட வாசகர்களுக்கு, இந்த வார்த்தைகள் ஆதியாகமம் 1:1ன் எதிரொலியாக ஒலிப்பது போல உள்ளன. இயேசுவை அடையாளப்படுத்தி விளக்குவதற்கு யோவான், ''ஆதியிலே" என்ற காலம் வரைக்கும் திரும்பிச் செல்ல வேண்டியதாக இருந்தது. உலகம் உண்டாவதற்கு முன்னமே, இயேசு இருந்தார்.

"வார்த்தை" என்பதே இயேசுவை அறிமுகப்படுத்துவதற்குப் பயன் படுத்தப்பட்ட சொல் விளக்கமாக உள்ளது. இயேசுவை "வார்த்தையாக உள்ளார்" என்பதை யோவான் 14 முதல் 18 வரையுள்ள வசனங்களுக்கு வரும் வரையிலும் கூறுவதில்லையென்றாலும், அவரை விவரிக்க அந்தச் சொல் விளக்கத்தை வசனம் 1 பயன்படுத்துகின்றது. கிரேக்க மொழியில் *logos* என்றுள்ள இந்த ''வார்த்தை'' என்பது யூத மற்றும் புறஜாதி வாசகர்களுக்குப் பலவகைப்பட்ட அர்த்தங்களைக் கொண்டிருந்தது. "வார்த்தை" என்பது உலகத்தை உண்டாக்கி நிலைநிறுத்துகின்ற தேவனு டைய செயல் வலிவான வல்லமை என்பதாக யூதர்கள் நினைத்தனர். இவ்வகையில்தான் "வார்த்தை" என்பது ஆதியாகமம் 1 மற்றும் 2 மற்றும் ஏசாயா 55:3, 11 ஆகிய வசனப்பகுதிகளில் பேசப்பட்டுள்ளது. "தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று'' (ஆதி. 1:3) என்பதை யூதர்கள் நினைவில் வைத்திருந்தார்கள். தேவனுடைய வார்த்தை என்பது வல்லமை நிறைந்ததாகவே இருக்கின்றது!

''வார்த்தை'' என்ற சொல் விளக்கத்தைப் புறஜாதியார் கேட்ட பொழுது, அவர்கள் அச்சொற்றொடரைக் கிரேக்கத் தத்துவ ஞானிகள் பயன்படுத்திய வகையில் சிந்தித்தார்கள். அது இந்த அண்டத்திற்குக் கட்டளையும் அர்த்தமும் கொடுத்த நபர்த்துவமற்ற சக்தி என்பதாக அவர்கள் கண்டனர். விளக்கவுரையாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளது போல, (அந்நாட்களில்) பெரும்பாலான மக்கள் "வார்த்தை" என்பதைப் பற்றி, (இந்நாட்களில்) நம்மில் பலர் "அணு உட்கருப் பிளப்பு" பற்றி சிந்திக்கின்ற

அதே விதமான வழிமுறையிலேயே சிந்தித்திருக்கலாம்.[3] அணுஉட்கருப் பிளப்பு பற்றி நாம் ஒரு விரிவான விளக்கம் அளிக்க முடிந்திராத நிலையில், அதை மதிப்பதற்கும், அதற்குப் பயப்படுவதற்கும் மற்றும் இயன்ற வரையில் அதைப் பற்றிப் பேசுவதற்கும் கூட, போதுமான அளவு அறிந்துள்ளோம்.

இயேசுவை அறிமுகப்படுத்த யோவான், "வார்த்தை" என்பதைப் பயன்படுத்திய பொழுது, அவர் ஏற்படுத்திய உரிமைகோருதல்கள் யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருசாராருக்கும் திகைப்பூட்டுபவை களாயிருந்தன. இவர் யாரைப் பற்றி எழுதிக் கொண்டிருந்தாரோ, அந்த இயேசுவானவர் தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாக, அண்டத்தைப் படைக்கும் வல்லமைக்குப் பின்பலமாக, மற்றும் வாழ்வு யாவற்றையும் ஒன்றுகூட்டித் தாங்கக் கூடியவராக இருந்தார். கொலோசெயர் 1:15-17 பின்வருமாறு கூறுகின்றது:

> அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத் திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவை களுமாகிய சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத் துவங்களானாலும் துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

"வார்த்தை" என்று யாரேனும் ஒருவர் குறிப்பிட்டதைக் கேட்ட பொழுது மக்கள் எதை நினைத்திருந்தாலும், யோவான் இவ்வகையில் தமது சுவிசேஷத்தைத் தொடங்கியிருப்பதில், தாம் விவரிக்கின்றவரைப் பற்றித் தைரியமான ஒரு உரிமைகோருதலை ஏற்படுத்தினார் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. தொடர்ந்து விரைவிலேயே யோவான், "வார்த்தை தேவனிடத்திலிருந்தது," "வார்த்தை தேவனாயிருந்தது," "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" மற்றும் "அவருக்குள் ஜீவன் இருந்தது" (1:1-4) என்று அறிவித்தார். மக்கள் இயேசுவை ஒரு மாபெரும் போதகர் அல்லது ஒரு ஞானமுள்ள மனிதர் என்று ஏற்றுக்கொள்ளும்படியாக யோவான் முயற்சி செய்து கொண்டிருந்த தில்லை; இயேசு தேவனுடைய இயல்பை உடையவராக, தெய்வீகத்துவ மானவராக இருந்தார் என்றே யோவான் அறிவித்துக் கொண்டிருந்தார்!

## வாழ்வின் ஒளி (1:6-8)

முதல் ஐந்து வசனங்களில் யோவானின் அதிர்ச்சியூட்டும் உரிமை கோருதலைத் தொடர்ந்து அவர் அடுத்த மூன்று வசனங்களை யோவான் ஸ்நானனைக் குறித்த ஒரு விவரித்தலுக்கு அர்ப்பணித்தார். நம்மில் பெரும்பாலோர், யோவான் ஸ்நானன் என்பவர் எலியா அல்லது எரேமியாவைப் போல ஒரு பெரிய தீர்க்கதரிசியாய் இருந்தார் என்று

நினைத்தாலும், முதல் நூற்றாண்டில் இருந்த மக்களில் பலர் அவரைப் பற்றி இன்னும் அதிகமாக நினைத்தனர். சிலர் அவரைக் கிறிஸ்து என்றுகூடத் தவறாக நினைத்தனர்! யோவான் ஸ்நானனே கூட தெளிவாக "நான் கிறிஸ்து அல்ல" (1:20) என்று எடுத்துரைக்குமளவுக்கு அவர் மிகப் புகழ் பெற்றவராகவும், மிகுந்த வல்லமையுடன் பேசுபவராகவும் இருந்தார்!

இப்படிப்பட்ட குழப்பத்தின் காரணமாக, இந்த சுவிசேஷத்தை எழுதியவர், யோவான் ஸ்நானனை ஒரு முக்கியமான சாட்சி என்றும், அவரை இயேசு என்று தவறாக நினைக்கலாகாது என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்: "அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான். உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (1:7, 8). யோவான் ஸ்நானனைக் குறித்து இதைக் கூறியதன் மூலம் எழுத்தாளர், எவரொருவரும், மாபெரும் யோவான் ஸ்நானனமும் கூட இயேசு என்னவாக இருக்கின்றாரோ, அதன் அருகில் நெருங்கி வருவதில்லை என்று அறிவித்தார்! இயேசு ஒருவரே "வார்த்தையாக" இருக்கின்றார்!

## *புறக்கணிக்கப்பட்ட ஒருவர் (1:9-11)*

இயேசு தெய்வீக வார்த்தையாக இருக்கின்றார் என்றால், பலர் அவரைப் புறக்கணிக்கிறது ஏன்? "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (1:10, 11) என்று யோவான் எழுதிய பொழுது, அவர் இந்தப் பரிதாபகரமான நிலை பற்றி நேரடியாகப் பேசினார். உலகத்தைப் படைத்தவர், தாம் படைத்திருந்த உலகத்தினால் புறக்கணிக்கப்பட்டார்! யோவான் இயேசுவைக் குறித்துத் தாம் முன்பு ஏற்படுத்தியிருந்த உரிமைகோருதல்களைக் காத்துக்கொள்வதின் மூலம் உலகமானது இயேசுவை இடர்ப்பாட்டுக்குரிய வகையில் புறக்கணிப்பதை அனுமதிக்க மறுத்தார். இயேசுவைப் புறக்கணித்தல் என்பது இயேசுவின் மாபெரும் தன்மையைக் காட்டிலும் இந்த உலகத்தின் நிலைப்பாடு உயர்வானது என்று உரிமைகோருதலாகும் என்று யோவான் கூறினார். இருளான உலகம் அவருக்குத் தனது முதுகைத் திருப்பிக் காட்டியிருந்தாலும் கூட இயேசு "மெய்யான ஒளி"யாக (1:9) நிலைத்திருக்கின்றார்!

தாம் படைத்த உலகத்தால் இயேசு புறக்கணிக்கப்பட்டதானது, வேலையின் கடினமான ஒரு நாளில் இருந்து இல்லம் திரும்பிய ஒரு மனிதனைப் பற்றிய பின்வரும் உவமையைப் போன்றதாக உள்ளது:

> அவன் அந்த நாளின் வேலைகளினால் தொய்வுற்று, தனது வேலை முடிந்திருக்கக் கண்டு மகிழ்வடைந்து, இல்லத்தில் தன் குடும்பத்துடன் இருப்பதை எதிர்நோக்கிச் செல்கிறான். அவனது இல்லத்தை நெருங்குகையில் அவனது நடை விரைவாகிறது. அவன் தனது சட்டைப் பையில் தனது (இல்லத்தின்) சாவி இருக்கின்றதா என்று தொட்டுப் பார்க்கிறான், ஆனால் அது அங்கிருக்கவில்லை;

*எப்படியோ அதைத் தவற விட்டுவிட்டான். ஆனால் அது ஒன்றும் பெரிய விஷயமல்ல; குடும்பமானது இல்லத்தில் இருக்கிறது. எனவே அவன் முன் கதவு வரை சென்று, அழைப்பு மணியை ஒலிக்கின்றான். ஒன்றும் நடக்கவில்லை. ஒருவரும் வந்து அவனுக்காகக் கதவைத் திறக்கவில்லை. அவர்கள் அங்கு இருக்கின்றனர், மற்றும் அவன் அங்கிருப்பதை அவர்கள் அறிகின்றனர். பலகணித் திரையானது சற்றே ஒதுக்கப்பட்டு, அவன் நன்கு அறிந்துள்ள கண்கள் அவன் வெளியே இருப்பதைக் காண்கின்றதை அறிகின்றான். ஆனால் அவர்கள் அவனை வெளியே நிற்கும்படி விட்டு விட்டார்கள்.*[4]

குடும்பத்தலைவன் ஒருவன், தான் நேசித்து பராமரிக்கின்றவர்களால் இவ்விதமாக கண்டுகொள்ளாமல் புறக்கணிக்கப்படுதல் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாகும். இருப்பினும், இயேசு இவ்வுலகத்திற்கு வந்த பொழுது மிகச் சரியாக இதுபோன்றுதான் நடைபெற்றது.

## *மனிதரின் மீட்பர் (1:12, 13)*

யோவானுடைய நாடக பாணியான அறிமுகமானது புறக்கணிப்பின் வெறுக்கத்தக்க குறிப்புடன் முடிவடைவதில்லை. அதற்குப் பதிலாக, அது இரட்சிப்பின் நம்பிக்கை நிறைந்த குறிப்பொன்றுடன் முடிவடைகின்றது. எல்லாரும் இயேசுவுக்கு தங்கள் முதுகைத் திருப்பிக் கொள்ளவில்லை. யோவானின் வாசகர்கள் உட்படச் சிலர் நாசரேத்திலிருந்து வந்த அப்போதகரைப் பின்பற்றுவதை தேர்ந்து கொண்டிருந்தனர். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (1:12) என்று யோவான் அறிவித்தார். இதற்காகவே யோவானின் சுவிசேஷம் எழுதப்பட்டது. சிலர் கவனத்தோடு கேட்டு விசுவாசிக்க வருவார்கள் (20:31) மற்றும் விசுவாசித்து இயேசுவின் நாமத்தில் ஜீவனைப் பெறுவார்கள்!

## *முடிவுரை*

ஆதியில் இருந்த "வார்த்தை" பற்றிய இந்த அனைத்துக் கூற்றும் மற்றும் விசுவாசமும் நமது வாழ்வில் இன்னொரு வாரத்தின் வேலைக்காக திங்கள் கிழமையன்று செல்லுகையில் ஏதாவது மாறுதலை ஏற்படுத்துகின்றதா? நிச்சயமாகவே ஏற்படுத்துகின்றது! இது உலகத்தில் எல்லா மாறுபாட்டையும் ஏற்படுத்துகின்றது! இயேசு வெறும் மனிதராக மட்டும் இருப்பதில்லை. அவர் ஒரு மாபெரும் போதகராய், அல்லது ஒரு ஞானமுள்ள தீர்க்க தரிசியாய் அல்லது வல்லமை நிறைந்த நடத்துனராய் மட்டும் இருப்பதில்லை. அவர் தேவனாக இருக்கின்றார்! அவரை விசுவாசித்தல் என்பதை நாம் தேர்ந்து கொண்டால், விரைவிலேயே நாம், இயேசுவைப் போலக் குறிப்பிடத் தக்கவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லை என்பதையும், அவரைப் பற்றி அறிவது போன்ற முக்கியமான விஷயம் வேறெதுவும்

இவ்வுலகில் இல்லை என்பதையும் கண்டு பிடிப்போம்.

புகழ் பெற்ற கலாச்சாரத்தினால் நீர்த்துப் போகப் பண்ணப்பட்ட இயேசுவல்ல, ஆனால் யோவான் சுவிசேஷத்தின் இயேசுவே நம் இரட்சிப்புக்கென்று நம்மை அவரிடத்தில் வரும்படி அழைக்கின்றார். அவர் வெறும் மனிதராக மட்டுமே இருந்தால், இந்த அழைப்பு சிறு அர்த்தம் கொண்டதாகத் தான் இருக்கும். அவர் உண்மையாகவே மாபெரும் மனிதர் என்பது தவிர வேறொன்றுமில்லையென்றாலும் கூட, இந்த அழைப்பானது நாம் காணாது விடும்படியானதாகவே இருக்கும். அவர் தேவனுடைய தெய்வீக வார்த்தையாக இருப்பதால், அவருடைய இந்த அழைப்பை இலேசானதாக எடுத்துக் கொள்ள நம்மில் யாரும் துணிய முடியுமா?

> அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும், தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள் (1:12, 13).

குறிப்புகள்

[1]Jeffery L. Sheler, "Who Was Jesus?" *U.S. News & World Report* (20 December 1993): 62. [2]Russell Watson, "A Lesser Child of God," *Newsweek* (4 April 94): 53. [3]Leon Morris, *The Gospel According to John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 116. [4]Leon Morris, *Expository Reflections of the Gospel of John* (Grand Rapids, Mich.: Baker Book House, 1986), 11.

## அன்பு

ஒரு சிறுமி தனது சிறிய வலிய தோள்களில் தன்னுடைய பொம்மைகளை அணைத்துக் கொண்டு, தனது தாயைப் பேராவலுடன் நோக்கி, ‘‘அம்மா, நான் இவைகளை அன்பு செய்கிறேன், அன்பு செய்கிறேன், மற்றும் அன்பு செய்கிறேன், ஆனால் இவைகள் ஒரு பொழுதும் பதிலுக்கு என்னை அன்பு செய்வதில்லை’’ என்று கூறினாள். தேவனால் அன்புகூரப்பட்டு, அன்புகூரப்பட்டு மற்றும் அன்புகூரப்பட்டுள்ள மக்கள் அவரைப் பதிலுக்கு அன்புகூராத விஷயத்தில் இது எவ்வளவு உண்மையாக உள்ளது!